**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 57/2023**

**வாதி தரப்பு சாட்சி–3 கந்தசாமி –** திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 26.11.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1) நான் ஆர்த்தாம்பட்டியை சேர்ந்தவர். வாதி எனக்கு உறவினரா என்றால், ஒன்றுவிட்ட அக்கா கணவர். வாதி எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால், பங்கு தரவில்லை என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார். பங்கு பிரிப்பது சம்பந்தமாக இருதரப்பினருக்கும் இடையே வழக்கு நடக்கிறதா என்றால், நடந்து வருகிறது. தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்திற்கான பட்டா யார் பெயரில் உள்ளது என தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்துக்கள் எந்த வருடம், யார் பெயரில் வாங்கப்பட்டது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. பாகம் பிரிப்பது சம்பந்தமாக நடந்து வருவதாக சொல்லும் வழக்கின் எண் தெரியுமா என்றால் தெரியாது. வாதி கலிங்கன் பாகம் கோரி தாக்கல் செய்த வழக்கின் தீர்ப்பு பற்றி தெரியுமா என்றால் தெரியாது. நான் 5 ம் வகுப்பு படித்துள்ளேன். எழுதப் படிக்க தெரியும்.

2) எனது சாட்சிய வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை படித்துப் பார்த்து கையெழுத்து போட்டேனா என்றால் ஆமாம். எனது வாக்குமூலத்தில் பிரதிவாதிகளின் பெயர் பற்றி தெரியுமா என்றால், செல்வத்திற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளனர். செல்வத்தை தவிர வேறு யார் பிரதிவாதிகளாக இருக்கிறார்கள் என்றால் தெரியவில்லை. தாவா சொத்தின் விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. செல்வம் அனுபவம் செய்து வரும் சொத்தை கலிங்கனுக்கு விட மறுக்கிறார் என்பதுதான் பிரச்சினை என்றால் சரிதான். நீதிமன்ற தீர்ப்புகள் பற்றி எனக்கு நேரில் தெரியாது என்றால் சரிதான். கலிங்கனுக்கும், செல்வத்திற்கும் இடையே சொத்து சம்பந்தமாக எப்போது

பிரச்சினை ஏற்பட்டது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு இவ்வழக்கு பற்றியும், வழக்கின் சொத்து பற்றியும் எந்த விபரமும் தெரியாது என்றால் சரிதான். வாதி எனக்கு உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**